DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 116/2021

Prosecution witness – PW.1

| | | | |
|---|---|---|---|
| Name | :திரு.திருக்கண்ணன் | Caste: | |
| Father's Name | : கருப்பண்ணன் | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

18.05.2026 – 11.17 AM

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

1. நான் மீனாட்சிபுரத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன வள்ளி எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரியைத் எனக்கு தெரியும். அவர் எனது உறவினர் ஆவார். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் எவ்வித முன்விரோதமும் கிடையாது. சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் நானும், எனது மனைவியும் எனக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் கமுதியில் இருந்து மீனாட்சிபுரத்துக்கு வந்து கொண்டிருந்தபோது கமுதி தாலுகா ஆபீஸ் அருகே ஒரு இருசக்கர வாகனம் வேகமாக வந்து எனது வாகனத்தின் மீது மோதியதில் நானும், எனது மனைவியும் நிலை தடுமாறி கீழே விழுந்துவிட்டோம்.

2. அதில் எனது மனைவிக்கு வலது பக்க தலையில் அடிபட்டு இரத்த போக்கு அதிகமாக இருந்தது. எனக்கு வலது கை விரல்களில் சிராய்ப்பு காயம் ஏற்பட்டது. எனது மனைவியை ஆட்டோ பிடித்து கமுதி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். மருத்துவர்கள் முதலுதவி சிகிச்சை அளித்து மேல்சிகிச்சைக்காக மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் எனது மனைவி மதுரை அரசு மருத்துவமனைக்கு செல்லும் வழியிலேயே இறந்துவிட்டதாக ஆம்புலன்ஸில் வந்த செவிலியர் கூறி தெரியவந்ததால் மீண்டும் எனது மனைவியை கமுதி அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தபோது மருத்துவர்கள்

பரிசோதித்துவிட்டு அவரது இறப்பை உறுதி செய்தார்கள்.

3. அன்றைய தினம் எங்கள் மீது மோதிய இருசக்கர வாகனத்தை யார் ஓட்டி வந்தார்கள் என்பதையோ, அதன் பதிவெண் என்ன என்பதையோ நான் கவனிக்கவில்லை. நான் கமுதி அரசு மருத்துவமனையில் இருந்தபோது கமுதி போலீசாரிடம் வந்து என்னிடம் ஒரு வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனுவில் என்ன சங்கதிகள் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி **கையொப்பம் அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. கடந்த 22.04.2021ம் தேதி நானும், எனது மனைவியும் TN–65–AU–2950 என்ற பதிவெண் கொண்ட Hero Splendor Plus என்ற இருசக்கர வாகனத்தில் கமுதி கோட்டைமேடு தாலுகா ஆபீஸ் அருகே மாலை 04.45 மணியளவில் வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரியானவர் TN–65–BZ–8013 என்ற பதிவெண் கொண்ட Hero Pleasure என்ற இருசக்கர வாகனத்தை எங்களுக்கு எதிர் திசையில் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து எங்கள் மீது மோதியதால் நாங்கள் இருவரும் கீழே விழுந்ததில் அதில் எனது மனைவிக்கு படுகாயம் ஏற்பட்டு அதன் காரணமாக இறப்பு ஏற்பட்டதற்கு எதிரி தான் காரணம் என புகார் மனுவிலும் போலீசார் விசாரித்தபோதும் சொல்லிவிட்டு தற்போது எதிரியின் மிரட்டலுக்கு பயந்து உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.18 16:34:22 +0530